செ.வெ.எண்.09 நாள்.06.04.2025

# பத்திரிக்கைச் செய்தி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் குழந்தை மையங்களில் காலியாக உள்ள **18 அங்கன்வாடி பணியாளர்கள், 04 குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் 24 அங்கன்வாடி உதவியாளர்கள்** பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளன. மாவட்டத்தில் வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் இனசுழற்சி விவரம் மாவட்ட திட்ட அலுவலகத்திலும், அந்தந்த வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களிலும், தகவல் பலகையில் ஒட்டப்படும். விண்ணப்பங்களை www.icds.tn.gov.in என்ற இணையதளத்தில் பதவிறக்கம் செய்துகொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பணிகளுக்கென 23.04.2025 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**தொகுப்பூதிய விவரம்:**

தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்படும் அங்கன்வாடி பணியாளருக்கு ரூ.7700–ம் குறு அங்கன்வாடி பணியாளருக்கு ரூ.5700–ம் அங்கன்வாடி உதவியாளருக்கு ரூ.4100–ம் மாதமொன்றுக்கு வழங்கப்படும். பன்னிரெண்டு மாத காலம் தொடர்ந்து பணியினை முடித்தப்பின், சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் அங்கன்வாடி பணியாளருக்கு ரூ.7700 – 24200 என்ற விகிதத்திலும் குறு அங்கன்வாடி பணியாளருக்கு ரூ.5700 – 18000 என்ற விகிதத்திலும் அங்கன்வாடி உதவியாளருக்கு ரூ.4100 – 12500 என்ற விகிதத்திலும் மாதமொன்றுக்கு வழங்கப்படும்.

**தகுதிகள்:**

இப்பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். அங்கன்வாடி பணியாளர் மற்றும் குறு அங்கன்வாடி பணியாளர் பணிக்கு 12 ஆம் வகுப்பு தேர்ச்சியும் அங்கன்வாடி உதவியாளர் பணிக்கு 10 ஆம் வகுப்பு தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். தமிழ் சரளமாக எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

அங்கன்வாடி பணியாளர் மற்றும் குறு அங்கன்வாடி பணியாளருக்கான வயது வரம்பு 01.04.2025 அன்று படி 25 வயது முடிந்து 35 வயதுக்கு மிகாமலும் விதவைகள் / ஆதரவற்ற பெண்கள்/ எஸ்சி / எஸ்டி வகுப்பினருக்கு அதிகபட்சமாக 40 வயது வரையிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்சமாக 38 வயது வரையிலும் இருக்க வேண்டும். அங்கன்வாடி உதவியாளருக்கான வயது வரம்பு 01.04.2025 அன்று படி 20 வயது முடிந்து 40 வயதுக்கு மிகாமலும் விதவைகள் / ஆதரவற்ற பெண்கள்/ எஸ்சி / எஸ்டி வகுப்பினருக்கு அதிகபட்சமாக 45 வயது வரையிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்சமாக 43 வயது வரையிலும் இருக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர் அறிவிக்கப்பட்டுள்ள கிராமத்திலுள்ள** குழந்தைகள் மையம் அமைந்துள்ள அதே கிராமத்தை சேர்ந்தவர், அதே கிராம ஊராட்சிக்குட்பட்ட பிற கிராமத்தை சேர்ந்தவர், அந்த கிராம ஊராட்சி எல்லையின் அருகிலுள்ள அடுத்த கிராம ஊராட்சியை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். **விண்ணப்பதாரர் அறிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகர பஞ்சாயத்திலுள்ள** குழந்தைகள் மையம் அமைந்துள்ள அதே வார்டு (அ) அருகிலுள்ள வார்டு (அ) மைய அமைந்துள்ள வார்டின் எல்லையை பகிர்ந்துக் கொள்ளும் வார்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து காலிப்பணியிட குழந்தை மையம் அமைந்துள்ள வட்டாரம் / திட்டம் (Block/ Project) **குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் மட்டுமே சமர்பிக்க வேண்டும்**. விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச்சான்றிதழ், 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், 12ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை / ஆதார் அட்டை, சாதிச்சான்று, வாக்காளர் அடையாள அட்டை ஆகிய சான்றிதழ்களின் சுயசான்றொப்பமிட்டு (Self attested) நகல்கள் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கை விடப்பட்டோர், ஆதரவற்ற பெண் ( தாய் / தந்தை இறப்பு சான்று ) மற்றும் மாற்றுத்திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் சுயசான்றொப்பமிட்டு (Self attested) இணைக்க வேண்டும். நேர்காணலின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும் என **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்**